# கேரள முதல்வராக சதீசன் இன்று பதவியேற்பு

திருவனந்தபுரம், மே 17: கேரள முதல்வராக காங்கிரஸ் மூத்த தலைவர் வி.டி.சதீசன் திங்கள்கிழமை (மே 18) பதவியேற்கவுள்ளார். அவருடன் 20 அமைச்சர்களும் பதவியேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருவனந்தபுரத்தில் உள்ள சென்ட்ரல் மைதானத்தில் நடைபெறும் பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலர் பிரியங்கா காந்தி, காங்கிரஸ் ஆளும் மாநில முதல்வர்கள் (கர்நாடகம், தெலங்கானா, ஹிமாசல பிரதேசம்), கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநிலத்தில் 10 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி அமைகிறது.

140 தொகுதிகளைக் கொண்ட கேரளத்தில் கடந்த ஏப்.9-இல் ஒரே கட்டமாக பேரவைத் தேர்தல் நடைபெற்றது. கடந்த மே 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் 102 இடங்களுடன் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்) ஆட்சியைக் கைப்பற்றியது. காங்கிரஸ் மட்டும் 63 தொகுதிகளில் வென்றது. இந்த வெற்றியின் மூலம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணியின் (எல்டிஎஃப்) 10 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்தது. இடதுசாரி கூட்டணிக்கு வெறும் 35 இடங்களே கிடைத்தன. பாஜக 3 இடங்களைக் கைப்பற்றியது.

**இழுபறிக்குப் பின் முதல்வர் தேர்வு:** தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, முந்தைய பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வி.டி.சதீசன், கட்சியின் பொதுச் செயலர் கே.சி.வேணுகோபால், மூத்த தலைவர் ரமேஷ் சென்னிதலா ஆகிய மூவர் இடையே முதல்வர் பதவிக்கு கடும் போட்டி எழுந்தது. 10 நாள்களாக நீடித்த இழுபறிக்குப் பின்னர் புதிய முதல்வராக சதீசன் (61) கடந்த 14-ஆம் தேதி தேர்வு செய்யப்பட்டார். அவரது தலைமையிலான அரசு திங்கள்கிழமை பதவியேற்கவுள்ளது.

ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸுக்கு 63, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 22, கேரள காங்கிரஸ் (ஜோசப்) 8, புரட்சிகர சோஷலிஸ கட்சி 3, கேரள காங்கிரஸ் (ஜாகோப்), கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி (சிஎம்பி) தலா 1 என்ற எண்ணிக்கையில் எம்எல்ஏக்கள் பலம் உள்ளது. இதுதவிர 4 சுயேச்சை எம்எல்ஏக்களும் இக்கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தேர்தலையொட்டி, பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணம், கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை உள்ளிட்ட 5 முக்கிய வாக்குறுதிகளை காங்கிரஸ் அறிவித்திருந்தது.

**கர்தினாலுடன் சந்திப்பு:** திருவனந்தபுரத்தில் உள்ள பிஷப் இல்லத்தில், சிரோ-மலங்கரா திருச்சபையின் தலைவரான கர்தினால் பேசிலியோஸ் கிளீமிஸை சதீசன் ஞாயிற்றுக்கிழமை சந்தித்தார். அப்போது, முதல்வர் பதவிக் காலம் சிறப்பாக அமைய சதீசனுக்கு கிளீமிஸ் வாழ்த்து தெரிவித்தார்.

## ராகுல், பிரியங்கா பங்கேற்பு



கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகரை ஞாயிற்றுக்கிழமை சந்தித்து மாநில அமைச்சர்கள் பட்டியலை வழங்கிய முதல்வராக பதவியேற்க உள்ள வி.டி.சதீசன்.

## ரமேஷ் சென்னிதலா உள்பட 20 அமைச்சர்கள்

கேரள முதல்வர் பதவிக்கான போட்டியில் இருந்தவர்களில் ஒருவரான காங்கிரஸ் மூத்த தலைவர் ரமேஷ் சென்னிதலா மாநில அமைச்சராகவுள்ளார். இவர் உள்பட தனது அமைச்சரவையில் இடம்பெறும் 20 பேரின் பட்டியலை ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகரிடம் முதல்வராக பதவியேற்க உள்ள வி.டி.சதீசன் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

காங்கிரஸில் இருந்து ரமேஷ் சென்னிதலா, மூத்த தலைவர் கே.முரளீதரன், கட்சியின் மாநிலத் தலைவர் சன்னி ஜோசப், முன்னாள் அமைச்சர் ஏ.பி.அனில் குமார் உள்பட 11 பேரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியில் இருந்து பி.கே.குஞ்ஞாலிக்குட்டி, என்.ஷம்சுதீன், கே.எம்.ஷாஜி, பி.கே.பஷீர், வி.இ.அப்துல் கஃபூர் ஆகிய 5 பேரும் இடம்பெற்றுள்ளனர். கேரள காங்கிரஸ் (ஜோசப்), கேரள காங்கிரஸ் (ஜாகோப்), புரட்சிகர சோஷலிஸ கட்சி, கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி ஆகியவற்றுக்கு தலா ஓரிடம் அளிக்கப்பட்டுள்ளது. புதிய அமைச்சர்களில் 14 பேர் புதுமுகங்களாவர்.

காங்கிரஸ் மூத்த எம்எல்ஏ திருவஞ்சூர் ராதாகிருஷ்ணனுக்கு பேரவைத் தலைவர் பதவி வழங்க கூட்டணி தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தமிழக முதல்வர் விஜய்க்கு அழைப்பு



கேரள முதல்வர் பதவியேற்பு விழாவில் பங்கேற்க தமிழக முதல்வரும், காங்கிரஸுடன் கூட்டணியில் உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய்க்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. எனினும், விழாவில் பங்கேற்பதை விஜய் தரப்பில் இன்னும் உறுதி செய்யவில்லை என்று வி.டி.சதீசன் தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் பினராயி விஜயன், மாநில பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலர் பினோய் விஸ்வம் ஆகியோர் கலந்துகொள்வர் என எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 38 ஆக உயர்வு: குடியரசுத் தலைவர் முர்மு ஒப்புதல்



ஹைதராபாத், மே 17: உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கையை 38-ஆக உயர்த்தும் மத்திய அமைச்சரவையின் முடிவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஞாயிற்றுக்கிழமை ஒப்புதல் அளித்தார்.

உச்சநீதிமன்றத்தில் தற்போது தலைமை நீதிபதி மற்றும் 33 நீதிபதிகள் என்ற அளவில் நீதிபதிகளின் எண்ணிக்கை உள்ளது. இந்த எண்ணிக்கையை 38-ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை கடந்த 5-ஆம் தேதி ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில், மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைத் தொடர்ந்து, உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கையை உயர்த்தும் அவசர சட்டத் திருத்தத்துக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

அடுத்தகட்டமாக 4 நீதிபதி பணியிடங்களை அதிகரிக்கும் திருத்த மசோதா வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும்' என்று கூறியுள்ளார்.

உச்சநீதிமன்ற சட்டம் (நீதிபதிகள் எண்ணிக்கை) 1956-இல் இயற்றப்பட்டபோது, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தவிர்த்து பிற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 10 என்ற அளவில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டது. 1960-இல் திருத்தச் சட்டம் மூலம் எண்ணிக்கை 13-ஆகவும், அடுத்த சட்டத் திருத்தம் மூலம் நீதிபதிகள் எண்ணிக்கை 17-ஆகவும் உயர்த்தப்பட்டது.

பின்னர், 1986-இல் மீண்டும் திருத்தச் சட்டத்தின் மூலம் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 17-லிருந்து 25-ஆக உயர்த்தப்பட்டது. பின்னர், 2009-இல் இந்த எண்ணிக்கை 30-ஆகவும், 2019-இல் தலைமை நீதிபதி உள்பட பிற நீதிபதிகளின் எண்ணிக்கை 34-ஆகவும் உயர்த்தப்பட்டது.

# கிளாண்டர்ஸ் நோய்த் தொற்று: 30 குதிரைகளின் ரத்தம் பரிசோதனைக்காக சேகரிப்பு

## குதிரை வளர்ப்பு உரிமத்துக்கு காலக்கெடு விதிக்கவும் திட்டம்

சென்னை, மே 17: 'கிளாண்டர்ஸ் நோய்த் தொற்று பாதிப்பு எதிரொலியாக சென்னை மாநகராட்சியில் சனிக்கிழமை 30 குதிரைகளின் ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு, பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், குதிரை வளர்ப்போர் உரிமம் பெறுவதற்கான காலக்கெடு விரைவில் நிர்ணயிக்கப்படும் என மாநகராட்சி கால்நடைப் பிரிவு அலுவலர் ஜெ.கமால் உசேன் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது: சென்னையில் நடுக்குப்பம் பகுதியில் திடீரென இறந்த வளர்ப்புக் குதிரையின் ரத்தத்தை பரிசோதித்தபோது அதற்கு 'கிளாண்டர்ஸ்' என்ற பாக்டீரியா பாதிப்பு இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறையினர் சென்னையில் உள்ள அனைத்துக் குதிரைகளுக்கும் ரத்தப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் நடுக்குப்பம், மெரினா, பூந்தமல்லி சாலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்புக் குதிரைகள் மொத்தம் 200-க்கும் மேல் உள்ளன. அதன்படி, மாநகராட்சி கால்நடைப் பிரிவு மருத்துவர்கள் உள்ளிட்டோர் அரசின் கால்நடைப் பராமரிப்புப் பிரிவினருக்கு உதவும் வகையில் குதிரைகளிடம் ரத்தம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, சனிக்கிழமை நடுக்குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் 30 குதிரைகளின் ரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது. அவை பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து குதிரைகளிடம் ரத்தம் மாதிரி சேகரிக்கப்படும்.

காலக்கெடு விதிக்கத் திட்டம்: சென்னை மாநகராட்சியில் குதிரைகளுக்கு உரிமம் பெறவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான காலக்கெடு ஏதும் விதிக்கப்படவில்லை.

அதனால், குதிரை வளர்ப்போர் யாரும் இன்னும் அவற்றுக்கு உரிமம் பெறவில்லை. ஆகவே, குதிரைகளுக்கு உரிமம் பெறுவதற்கான காலக்கெடு விதிப்பதற்கு மாநகராட்சி ஆணையருடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்

## பேரவைத் தலைவர் அறிவிப்பு

சென்னை, மே 17: தமிழக முதல்வர் விஜய் பெயரில் 3 நாள் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக சட்டப்பேரவைத் தலைவரும் ஆயிரம் விளக்கு தொகுதி எம்எல்ஏவுமான ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்தார்.

கோபாலபுரம் விளையாட்டு மைதானம், நுங்கம்பாக்கம் விளையாட்டு மைதானம், கில் நகர் விளையாட்டு மைதானம் மற்றும் கில் நகர் பூங்கா ஆகிய பகுதிகளில் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அங்கிருந்த விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.

இதையடுத்து, மழைநீரை அகற்றும் வகையில் மண் நிரப்பி மைதானத்தை சரி செய்ய வேண்டும்; கண்காணிப்பு கேமராக்களை பொருத்த வேண்டும்; குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, கிரிக்கெட் வலை பயிற்சி அமைத்து தர வேண்டும் என விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து வீரர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் கூறியதாவது:

ஆயிரம் விளக்கு சட்டப்பேரவை தொகுதியில் முதல்வர் விஜய் விளையாட்டு கோப்பை என்ற பெயரில் 3 நாள்கள் அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் நடத்தி, கோப்பை மற்றும் பரிசுகள் வழங்கப்படும் என்றார் அவர்.

இந்த ஆய்வின் போது அதிகாரிகள் உடனிருந்தனர்.



ஆயிரம் விளக்கு சட்டப்பேரவை தொகுதி கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தை ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்து விளையாட்டு வீரர்களிடம் தேவையான வசதிகள் குறித்து கேட்டறிந்த சட்டப்பேரவைத் தலைவரும் தொகுதி எம்எல்ஏவுமான ஜே.சி.டி.பிரபாகர்.